இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

தோமா அவரிடம், ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்துகொள்ள இயலும்?" என்றார். இயேசு அவரிடம், "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்" என்றார். (யோவான் 14:5-7)

# புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே!'

## ஐந்தாண்டு நிறைவைக் கொண்டாடுவோம் (மே 14 - மே 24)

வத்திக்கான் **புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே!'** (Laudato Si, Mi Signore) எனும் சுற்றுச் சூழல் பற்றிய சுற்றுமடல் வெளியிடப்பட்ட ஐந்தாண்டு கால நிறைவை முன்னிட்டு, 2020 மே 16 முதல் 24 வரை 'புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே!' வாரத்தை கொண்டாட உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க திருஅவையைத் திருத்தந்தை பிரான்சிஸ் காணொளி ஊடகம் வழி அழைப்பு விடுத்துள்ளார்.

மேற்கூறிய இந்தச் சுற்ற' மடல் வெளியிடப்பட்ட 5-வது ஆண்டு நிறைவைக் கருத்தில் கொண்டு, திருத்தந்தை பிரான்சிஸ் வீடியோ செய்தியை பதிவு செய்துள்ளார். அதில், உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க சமூகங்களுடன் உரையாற்றினார். "நமக்குப்பின் வருபவர்களுக்கும், வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும் நாம் எந்த வகையான உலகத்தை விட்டுச் செல்ல விரும்புகிறோம்?" என்று திருத்தந்தை பிரான்சிஸ் காணொளி செய்தியில் வினவினார்.

"இந்த கேள்வியால் நான் எழுச்சிப் பெற்றேன்", என்ற திருத்தந்தை "2020 மே 16-24 வரை 'புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே!' வாரமாக : நமது பொதுவான இல்லத்தின் பராமரிப்பில்." பங்கேற்று கொண்டாட, உங்களை அழைக்க விரும்புகிறேன் என்றார். சுற்றுச்சூழல் நெருக்கடிக்குப் பதிலளிப்பதற்கான அவசர அழைப்பையும் திருத்தந்தை புதுப்பிக்கிறார்: "பூமியின் அழுகையும் ஏழைகளின் அழுகையும் தொடர முடியாது", என்று அவர் வருத்தத்துடன் கூறுகிறார்.

"நம்முடைய நல்ல படைப்பாளராகிய கடவுளின் கொடையான இந்த படைப்பை கவனித்துக் கொள்வோம். 'புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே!" வாரத்தை ஒன்றாக மதித்துக் கொண்டாடுவோம். என்று அனைவருக்கும் அழைப்புவிடுத்துள்ளார்.

ஈடுபடுவது



ஒருங்கிணைந்த முழ மனித வளர்ச்சி அலுவலகம் இந்த 'புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே! வாரத்திற்கான நிதியுதவியைச் செய்கிறது. மேலும் இது கத்தோலிக்க சமூகங்களை இந்த ஒரு வாரக்கால முயற்சியின் போது படைப்புக்காக துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்க ஊக்குவிக்கிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைய நீங்கள் அனைவரும் ஆர்வமாக உள்ளீர்கள். மற்றும் உங்கள் 'புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே! பயணத்தின் அடுத்த நடவடிக்கையை எடுக்க விரும்பினால், இதன் இணைய தளத்தில் கிடைக்கும் பரிந்துரைகளைப் பயன்படுத்தலாம் என வத்திக்கான் கூறுகிறது.

'புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே! சுற்று மடலில் ஐந்தாம் ஆண்டு நிறைவு சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளின் நிகழ்வுகளுடன் ஒத்துப்போகிறது. குறிப்பாக "பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தின்" (Paris climate agreement.) இலக்குகளை பூர்த்தி செய்வதற்கான திட்டங்களை நாடுகள் அறிவிக்கக் கொடுக்கப்பட்ட காலக்கெடு இந்த ஆண்டு முடிவடைகிறது.

மேலும், இந்த 2020-ஆம் ஆண்டு பல்லுயிர் பாதுகாப்புத் தொடர்பான ஐ.நா.வின் மாநாட்டையொட்டி, இதில் அனைத்து உயிரினங்களையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க மனித குலத்திற்கு அரிய வாய்ப்பு கிடைக்கும் என நம்பலாம் என மேலும் வத்திகானின் அறிக்கை கூறுகிறது.

இன்றைய உலகத்திற்கு ஏற்பட்டுள்ள சீர்கேடுகள் பற்றிய கவலையில் திருஅவை ஆழ்ந்துள்ள வேளையில், **புகழனைத்தும் உமதே, என் ஆண்டவரே!'** எனும் திருத்தந்தையின் படைப்பு உலகத் தலைவர்களையும் அரசுகளையும் வெகுவாகக் கவர்ந்துள்ள வேளையில், இந்த பொது இல்லமான உலகின் தூய்மை பாதுகாப்புக்கு ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமைகள் பல. அவற்றுள் தூக்கி எறியும் பண்பாடு மிக முக்கியம் வாய்ந்ததாகும்.

குப்பைகளையும் கழிவு களையும் முறையாக அப்பறுப்படுத்தும் வழிமுறைகளைக் கண்டிப்பாகக் கடை பிடிக்க வேண்டும். இதில் ஆறுகளின் தூய்மையைப் பேணுவதும் நெகிழிகளின் பயன்பாட்டைத் தூடைத்தொழிப்பதும் இன்றியமையாதவை என திருத்தந்தை இச்சுற்று மடலில் வலியுறுத்தியுள்ளார்.

# மே 14, செபம், உண்ணா நோன்பு, மற்றும், பிறரன்பின் நாள்

**வத்திக்கான்**: இவ்வாண்டு கொரோனா தொற்று நோய் அச்சம் காரணமாக, நாம், வீட்டில் இருந்தவாறே, அன்னை மரியா திருத்தலங்களுக்கு, ஆன்மீக முறையில் பயணம் மேற்கொள்வோம்

மே மாதம் மூன்றாம் தேதி கடந்த ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்ட நல்லாயன் ஞாயிறன்று, தன் நூலகத்திலிருந்து அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதன் இறுதியில், தேவ அழைத்தலுக்காக செபிக்கும் உலக செப நாள் இது என்பதை நினைவூட்டி, அனைவரையும் இறைவேண்டல் செய்ய அழைப்பு விடுத்தார்.

குருத்துவமும் துறவற வாழ்வும் எதிர்பார்க்கும் மன உறுதியும் விடாமுயற்சியும் கொண்ட பாதையை, நாம் இறைவேண்டலினால் அன்றி வேறு எதனாலும் பெறமுடியாது என்று கூறியத் திருத்தந்தை, நல்ல பணியாளர்கள் எனும் கொடைக்காக இறைவனை வேண்டுமாறு அழைப்பு விடுத்தார்.

இன்றைய உலக நெருக்கடியை குறிப்பிட்டு, கோவிட்-19 நோய்க்கு தடுப்பு மருந்தும், நோய் அகற்றும் மருந்தும் கண்டுபிடிக்கப்படுவதற்கு, உலக அளவில், ஒருங்கிணைந்த முயற்சிகள் இடம் பெற வேண்டும் எனவும் விண்ணப்பித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

சமய நம்பிக்கையுடைய அனைவரும் இணைந்து, இம்மாதம் 14-ஆம் தேதியன்று, இறைவேண்டல், நோன்பு, மற்றும், பிறரன்பு நடவடிக்கையின் நாளை கடைபிடிக்க, மனித உடன்பிறந்த நிலை என்ற அமைப்பின் உயர்மட்ட குழு விடுத்துள்ள பரிந்துரையை தானும் ஏற்றுள்ளதாக அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாளின் முயற்சிகளை, இந்நோய் அகற்றலுக்கான இறைவேண்டலுக்கு சமர்ப்பிக்க உள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

அன்னை மரியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த மே மாதத்தில், ஒவ்வோர் ஆண்டும் அன்னை மரியா திருத்தலங்களுக்கு விசுவாசிகள் திருப்பயணம் மேற்கொள்வதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு கொரோனா தொற்று நோய் அச்சம் காரணமாக, மக்கள், வீட்டில் இருந்தவாறே, இத்திருத்தலங்களுக்கு, ஆன்மீக முறையில் பயணம் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்*



# இல்லம் சார்ந்த மறைக்கல்வி

கோவிட்-19-ன் காரணமாக ஆலயங்கள் மூடப்பட்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் மறைக்கல்வி வகுப்புகள் பங்குகளில் நடத்தப்பட இயலாதச் சூழலில், பெற்றோரே முதல் மறைக்கல்வி ஆசிரியர்கள் என்ற படிப்பினையில், இல்லங்களில் பிள்ளைகளுக்கு மறைக்கல்வியளிக்க அழைக்கப்படுகிறார்கள்.

இதற்கு உதவியாக கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மறைக்கல்வி ஆணையம் ஒவ்வொரு வாரமும் அந்தந்த வாரத்தின் ஞாயிறு நற்செய்திக்கொப்ப சில மறைக்கல்வி நடவடிக்கைகள் கொண்ட கையேட்டினைத் தயாரித்து வழங்கி வருகிறது.

பெற்றோர்கள் இக்காலக் கட்டத்தை ஒரு விடுமுறை காலமாகக் கருதாமல், இயன்றவரை பிள்ளைகளின் மறைக்கல்விக்காக வாரந்தோறும் நேரம் ஒதுக்கி இந்த கையேட்டினைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை குடும்பமாக அமர்ந்து செய்ய பணிக்கப்படுகிறார்கள். நான்கு மொழிகளிலும் பாடங்களும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.




அறிமுகம்

குடும்ப உறுப்பினர் ஒன்றுகூடி பாஸ்கா பெருவிழாவைப் பற்றி கற்றறிந்து, சிந்தித்து மற்றும் கலந்துரையாட ஒரு வாய்ப்பை வழங்க, இந்தப் பாடப்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. வீட்டில் ஒரு வகுப்பறை போன்ற அணுகுமுறையைக் கையாள்வது சாத்தியமில்லை என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் வழங்கப்படும் இந்த பாடப்பொருள் குறைந்தது பெற்றோரையும் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

பாடப் பொருளை எவ்வாறு பயன்படுத்துவது

குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாகவோ அல்லது தனிநபர்களாகவோ அல்லது குழுக்களாகவோ செய்யக்கூடிய நடவடிக்கைகள் உள்ளன. இந்த நடவடிக்கைகள் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஒரே நேரத்தில் வெவ்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள சில பக்கங்களை அச்சியெடுத்துக் கொண்டால் உதவியாக இருக்கும்.

பாடப் பொருளை எப்போது பயன்படுத்தலாம்

குடும்ப உறுப்பினர்கள் 3-ஆம் பாஸ்கா ஞாயிறு நேரடி ஒலிப்பரப்பு திருப்பலியில் பங்குபெற்றப் பின் வரும் வார நாள்களில் இதைப் பயன்படுத்தலாம்.

பாடங்களை Google classroom, code fo23eot -ல் பெற்றுக்கொள்ளலாம்.

# புலம்பெயர்ந்தோரிடையே பணியாற்றுவோர்க்கு மேய்ப்புப்பணி வழிமுறைகள்

**வத்திக்கான்**: புலம்பெயர்ந்தோரின் இன்றைய நிலைகள் குறித்தும், அவர்கள் மீது காட்டப்படவேண்டிய சிறப்புக் கவனம் குறித்தும் விவரிக்கும் புதிய திருப்பீட ஏடு வெளியாகியது.

நாட்டிற்குள்ளேயே புலம்பெயர்ந்தவர்களாக வாழும் மக்களுக்குரிய மேய்ப்புப் பணி ஆற்றுவதற்கான வழிமுறைகள் குறித்த ஏடு ஒன்றை, மே 05, இச்செவ்வாயன்று வத்திக்கான் வெளியிட்டது, ஒருங்கிணைந்த மனித வளர்ச்சி திருப்பீட அலுவலகம்..

நாட்டிற்குள்ளேயே புலம்பெயர்ந்து வாழும் மக்களிடையே பணியாற்றும் கத்தோலிக்க பங்குத்தளங்கள், மற்றும், நிறுவனங்களுக்கு வழிகாட்டும் நோக்கத்தில் இந்த ஏட்டை வெளியிட்டுள்ள ஒருங்கிணைந்த மனித வளர்ச்சி திருப்பீட அவையின் புலம்பெயர்ந்தோர் பிரிவு, புலம்பெயர்ந்தோரின் இன்றைய நிலைகள்



குறித்து விரிவாக விளக்குவதுடன், அவர்கள் மீது காட்டப்படவேண்டிய சிறப்புக் கவனம் குறித்தும் விவரித்துள்ளது.

நாட்டிற்குள்ளேயே புலம்பெயர்ந்து வாழ்வோர் குறித்த அக்கறையின்மை, தவறான புள்ளிவிவரங்கள், சமூகங்களின் வீண் அச்சம், அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு, புலம்பெயர்ந்தோர் சந்தைப் பொருட்களாக கடத்தப்படுதல், முகாம்களில் வாழும் அந்த மக்களுக்கு பொருளாதார உதவிகள், போர் நிறுத்தங்கள், இவர்களின் ஆன்மீக வளர்ச்சியில் கவனம், இவர்களுக்கான நடவடிக்கைகளில் மதக்குழுக்களிடையே ஒத்துழைப்பு போன்ற வெவ்வேறு தலைப்புக் களில் புலம்பெயர்ந்தோர் நிலை குறித்து விவாதித்துள்ளது, இந்த அவையின் ஏடு.

புலம்பெயர்ந்தோர்க்குரிய திட்டங்களைச் செயல் படுத்தும்போதும், புதிய திட்டங்களை வகுக்கும்போதும் இந்த ஏடு காட்டும் வழிமுறைகள் உதவுவதாக இருக்கும் என உரைக்கும் இவ்வேட்டின் முன்னுரை பகுதி, மக்களிடையே தகவல் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி, புலம்பெயர்ந்தோருக்கு பாதுகாப்பு வழங்கவும், அவர்களை ஊக்குவித்து, சமூகத்தோடு ஒன்றிணைக்கவும், இந்த வழிகாட்டுதல்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறுகிறது.

புலம்பெயர்ந்த மக்களுக்கு ஒன்றிணைந்த திட்டங்களை வகுக்கும்போது, இந்த வழிகாட்டுதல் ஏட்டை கத்தோலிக்க நிறுவங்கள் ஏனைய அரசு சாரா அமைப்புகளுடனும், நிறுவனங்களுடனும் பகிர்ந்துகொள்ளுமாறும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய எட்டில் தரப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் துணைகொண்டு, புலம்பெயர்ந்தோரிடையே பணியாற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறும், இவ்வேடு அழைப்பு விடுக்கிறது.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்*

## சமூகங்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாகச் செயல்படவேண்டும்

எப்போதும் இல்லாத அளவுக்கு, தற்போது உலகம் முழுவதும், தொற்று நோய்ப் பிரச்சனையால் துன்புறும் வேளையில், ஏழை நாடுகளின் சார்பாக அவசர விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளது, பிரிட்டனின் கத்தோலிக்க CAFOD அமைப்பு.

வளரும் நாடுகளின் ஏழை மக்கள், இத்தொற்று நோயால் இறப்புக்களை மட்டுமல்ல, வருங்காலம் குறித்த நிச்சயமற்ற ஒரு நிலையையும் எதிர்நோக்கி வருகின்றனர் என்ற CAFOD உதவி அமைப்பு, ஆப்ரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா, மத்தியகிழக்கு நாடுகள் ஆகியவைகளின் நிலை குறித்தும், சிரியா, தென் சூடான், மற்றும், பங்களாதேசில் வாழும் புலம்பெயர்ந்த மக்கள் குறித்தும், அச்சம் பிறந்துள்ளதாகத் தெரிவிக்கிறது.

நிதியுதவியை அல்ல, மாறாக, அனைத்து சமுதாயங்களும் இத்துன்ப வேளையில் ஒருவருக் கொருவர் ஆதரவாகச் செயல்படவேண்டும் என்பதை எதிர்பார்ப்பதாக அறிவித்துள்ளது, இந்த கத்தோலிக்க அமைப்பு.

ஏழை நாடுகளில், குறிப்பாக, ஆப்ரிக்கக் கண்டத்தில், ஏழை மக்களுக்கு உணவுப் பொருட்களையும், கை சுத்திகரிப்பு திரவங்களையும், அப்பகுதி தலத் திருஅவைகள் வழியாக வழங்கி வருவதாகக் கூறும் CAFOD அமைப்பு, உணவு, சுத்தமான குடிநீர் வழங்குதல், பாதுகாப்பு குறித்த வழிகாட்டுதல்கள் போன்றவைகளே, தற்போது தங்கள் முதல் குறிக்கோளாக இருப்பதாகவும் கூறியுள்ளது.

**வாட்செப் (WhatsApp) வாயிலாகத் திருவிவிலியக் கல்வி**

தமிழ்ப் பேசும் இறைமக்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க முதன்முறையாக 'வாட்செப்' வாயிலாக திருவிவிலியக் கல்வி தமிழில் தொடங்கப்பட்டுள்ளது. இப்பாடத் திட்டத்தில் ஆர்வமுள்ளோர் கீழ்க்கண்ட சகோதரரோடு தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

ஆர்.கே.சாமி 012 2285452

# இறைநம்பிக்கையில் வாழ்வதே வாழ்வு

பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிரை சந்திக்கும் இவ்வேளையில், இன்றைய முதல் வாசகத்தில் கைம்பெண்களை அன்றாடப் பந்தியில் முறையாக கவனிக்கப் படவில்லை என எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராக முனுமுனுத்தனர். உணவு முக்கியமா? இறைவார்த்தை முக்கியமா ? என்ற கேள்விக்கு இரண்டுமே முக்கியம்தான், ஆனால், முதலில் இறை வார்த்தைக்குதான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் .என்ற கோரிக்கையை முன் வைத்து, அவர்களுள் நற்சான்று பெற்ற சிலரை அழைத்து திருத்தூதர்கள் முன் நிறுத்தி தங்கள் கைகளை அவர்கள் மீது வைத்து இறைவனிடம் வேண்டினர் . இது குறித்து 1தீமெ 4:14ல் கூறுவது போல் இறைவாக்கு உரைத்து, மூப்பர்கள் உன் மீது கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்திய போது உனக்கு அளிக்கப்பட்ட அருள்கொடையைக் குறித்து அக்கறையற்ற வனாய் இராதே என்று இவ்வாசகம் கூறுகிறது . ஆம், ஒரு பங்கு சரியாக செயல் பட வேண்டுமென்றால் தனி ஒருவரால் (திருப்பணியாளர்) முடியது அதில் பல பணிக்குழுக்கள் செயல்படும் போது அந்த பங்கு வெற்றிகரமாகச் செயல்படும் .குடும்பமும் அது போலத்தான், கணவன், மனைவி, பிள்ளைகள் எனத் தனித் தனியாக செயல்பட்டால் அந்த குடும்பம், குடும் பமாக இல்லாமல் பிளவுப்பட்டு போய்விடும் . ஒன்றுபட்டு வாழ்ந்தால்தான் அந்த குடும்பத்துக்கு அழகு

இன்றைய இராடாவது வாசகம் ஒற்றுமையை குறித்து போதிக்கிறது. உயிருள்ள கல்லாகிய இயேசுவை அனுகுங்கள், மனிதரால் உதறி தள்ளப்பட்டதாயினும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட உயர் மதிப்புள்ள கல் அதுவே, ஆம் அந்த உயிருள்ள கல்லாகிய ஆண்டவரை வழிபட முடியாமல் ( கொரோனா ) என்னும் தொற்று நோயின் காரணமாக எந்தவொரு ஆலய நிகழ்வுகளிலும் கலந்தக் கொள்ளமுடியாமல் வீட்டிலேயே முடங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. ஆண்டவர் கூறுவதுப் போல் நமது துக்கங்கள் மகிழ்சியாக மாறும் கவலைப் பட வேண்டாம் . மேலும் இன்றைய நற்செய்தியில் உள்ளம் கலங்க வேண்டாம், கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள், என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள், என்கிறார். ஆண்டவரோடு மூன்று வருடமாக பயணம் செய்தவர்கள் அவருடைய அற்புதங்களை கண்கூடாகக் கண்டவர் களில் ஒருவர் தோமா ஏன் ? இப்படி ஒரு கேள்வியை கேட்கிறார் , ஆண்டவரே நீர் எங்கு போகிறீர் என்றே எங்களுக்கு தெரியாது என்கிறார் , அடுத்து பிலிப்போ, ஆண்டவரே தந்தையை எங்களுக்கு காட்டும் அதுவே போதும் என்கிறார். நாமும் இதுபோன்று பல தருணங்களில் முறையிட்டதுண்டு.

அடுத்ததாக இறைவன்மீது, தன்மீது நம்பிக்கை கொள்ளச் சொல்லும் இயேசு, அத்தகைய நம்பிக்கையினால் ஆகும் நன்மைகளைக் குறித்து மிகத் தெளிவாகப் பேசுகின்றார். "நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்; ஏன், அவற்றைவிடப் பெரியவற்றையும் செய்வார்" என்கிறார் இயேசு. இயேசுவின் இவ்வார்த்தைகள் நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்போது இதில் இருக்கும் அர்த்தம் மிகத் தெளிவாகப் புரியும். நாம் இயேசுவின் மீது ஆழமான நம்பிக்கை வைத்து வாழும்போது அவரைப் போன்று பேய்களை ஓட்ட முடியும், நோயாளிகளைக் குணப்படுத்த முடியும்.\

நாமும் பல மன்றாட்டுகளை ஆண்டவரிடத்தில் வைத்திருப்போம். . அது கால தாமதமாகி இருக்கலாம், அதனால் நம்பிக் கைத் சற்று தளர்ந்து போயிருக்கலாம். ஆனால் தோமாவும், பிலிப்பும் கேட்ட கேள்விக்கு பதில் தந்ததுப் போல் நம்முடைய மன்றாட்டுக்கும் நிச்சயம் பதில் உண்டு என நம்புவோம்.

நம்மிடத்தில் இருக்கும் இறைநம்பிக்கை வாழ்வாகும் போதுதான் உலகில் இருக்கும் எல்லா தீமைகளும் மறைந்து இறைவன் அளிக்கும் எல்லா ஆசிரயும், அருளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

*ASP ஜேம்ஸ் நாதன் ஸ்ரீரி கெம்பாங்கான்*

**பாஸ்கா காலம் ஐந்தாம் ஞாயிறு**

திப. 6: 1-7
திபா 33: 1-2. 4-5. 18-19.
1பேதுரு 2: 4-9
யோவான் 14: 1-12

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**

**வாரநாள் முதல் வாசகம்: 2**

**திருப்புகழ் மாலை : வாரம் I**